மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவரவர்களே, பள்ளிகள் சாதாரணமாக ஜூன் மாதத்திலே ஆரம்பித்தாலும், 'டீச்சர்-பியூப்பில் ரேஷியோ'வில் ஆசிரியர்களை நிர்ணயம் செய்யும் முறை இல்லை. சுமார் 6 மாத காலமாக 'டீச்சர்-பியூப்பில் ரேஷியோ' முறையில் நிர்ணயம் செய்ய முடியாமல் உள்ளது. டி.பி.ஐ. ஆபீசில் பேப்பர் நின்று போய்விடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, 'டீச்சர்-பியூப்பில் ரேஷியோ' முறையில் ஸ்டாஃப்களை பிக்ஸ் பண்ண சீக்கிரம் பைசல் செய்யுமாறு டி.பி.ஐ. ஆபீசிற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ' Extension of the provisions of the Grant-in-Aid coda ' படி பள்ளிகள் வைக்கின்ற முறையில் அந்த ஆண்டுக் கணக்கை ஆடிட் செய்த பிறகு அளிக்க வேண்டியிருக்கிறது. 1968-69-ம் ஆண்டுக்கான கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டு, குறிப்பிட்ட பள்ளிக்கூடத்திற்கு 6,800 ரூபாய் வழங்க இப்பொழுது முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் இந்தத் தேதியிலிருந்து என்பதற்கான நிலைமைகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வளவுக் கெவ்வளவு விரைவில் ஆடிட் செய்து கணக்குகள் கொடுக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் நிதி உதவி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Electric Crematorium in Madras

* 374 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to instal electric crematorium in Madras City?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை, ஐயா.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள பல இடுகாடுகளைப்போல, பல நகராட்சிகளிலே சொந்தமாக இடமில்லாமல் இருக்கின்றன. எனவே, நகராட்சிகளைப் பொறுத்த வரையிலும், நல்லமுறையில் சுடுகாடு அமைக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது மின்சார சுடுகாடு ஏற்படுத்துவது பற்றியது. மின்சார சுடுகாடு ஏற்படுத்த வேண்டுமென்று சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஒரு வரைவுத் திட்டத்தை மாநகராட்சி மன்றத்தில் வைத்தார்கள். ஆனால் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மக்களிடத்தில் எதிர்ப்பு உணர்ச்சி ஏற்படும் என்று சொல்லி நிறுத்தி

1970 மார்ச் 14]

வைத்துவிட்டார்கள். மற்ற சுடுகாடுகள் எப்படி இருக்க வேண்டு மென்று, மாநகராட்சி மன்றம் முறைப்படி கவனித்து ஆவன செய்ய முயற்சிக்கப்படும்.

திரு. பி. வேலுசாமி : தலைவர் அவர்களே, பல நகரங்களில் சுடுகாடுகள் நகரத்தின் மத்தியில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதுதான் திரு. ஏ. சி. நரசிம்மன் கேள்வி கேட்டபொழுது கூறப்பட்டது. இந்தக் கேள்வி, சென்னையில் மின்சார மேடையுள்ள சுடுகாடு அமைப்பது குறித்தது. அதைப்பற்றிக் கேளுங்கள்.

திரு. பி. வேலுசாமி : இம்மாதிரி இருக்கக்கூடிய இடங்களி லாவது இந்த மின்சார மேடை சுடுகாட்டை அமைக்க வேண்டும். இல்லையென்றால், சுடுகாட்டை நகர எல்லைக்குக் கொண்டு வருவ தற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய குறிப்புகள் எதுவுமில்லை. தனிக் கேள்வி போட்டால், அதைப் பற்றி என்ன முறைகள் மேற்கொள்ளப்படும் என்று கண்டறிந்து விவரங்கள் தரலாம்.

THIRU K. VINAYAKAM : What was exactly the proposal made by the Commissioner of the Corporation of Madras regarding this electric crematorium? What was the estimated cost and where was the objection raised for?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தியாகராயநகர் பகுதியில் உள்ள சுடுகாட்டில் இம்மாதிரி எலக் டிரிக் கிரமடோரியம், மின்சாரம் பொறிக்கப்பட்ட சுடுகாடு ஒன்றை வைக்கலாம் என்ற வரைவுக் குறிப்பை மாநகராட்சி மன்ற ஆணை யாளர் மாநகராட்சி மன்றத்தில் வைத்தார்கள். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் இந்துக்கள் மற்றவர்களிடையே இதற்கு எதிர்ப்பு உணர்ச்சி ஏற்படுகிறது என்ற காரணத்தைத் தெரிவித்து, இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படாமல் நிறுத்தி வைக்கப் பட்டது. இதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. என். வரதராஜன் : ஜனத்தொகை வளர்ந்து வருகிற பெரிய நகரங்களில் சுடுகாடுகள் இன்றைக்கு இருக்கிற நிலைமையில் சுகாதாரத்திற்கு மிகவும் ஆபத்தாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் சிலர் செத்தவர்களைப் புதைக்கிறார்கள். சிலர் சுடுகிறார்கள். மின்சார வசதியுள்ள சுடுகாட்டை ஏற்படுத்தினால், இதையும் உபயோகப்படுத்தலாம். சுகாதாரத் திற்கும் உதவியாக இருக்கும். ஆகவே, இதைப்பற்றிச் சர்க்கார் புனராலோசனை செய்ய முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1970 மார்ச் 14

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற யோசனையைப் பல பேர் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். அதற்கான முயற்சி செய்வது கூட ஓரளவுக்கு வளர்ந்துவருகிற நகரங்களில் நன்மை பயக்கும். செத்தால், சிலர் பிணங்களை எரிக்கிறார்கள். அப்படிப் பிணங்களை எரிக்கவேண்டும் என்று சொல்கிறவர்களுக்கு முழு வாய்ப்பையும் அளித்துவிட்டு மின்சார சுடுகாடு வைக்கப்பட்டு, அதன் மூலம் பிணங்களை எரிப்பதற்கும் வாய்ப்பு அளித்து, இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது வளர்ந்து வருகிற நகரங்களில் இரண்டு முறைகளும் இருக்கலாம். மின்சார வசதியைப் பயன்படுத்தினால், பிணத்தை வைத்து ஐந்து நிமிடங்கள் கழித்து, சாம்பலையும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்திவிடலாம். மறுநாள் சொந்தக்காரர்கள், மற்றவர்களுடன் மறுபடியும் அங்கே வரவேண்டிய அவசியம் ஏற்படாது. சுகாதார வளர்ச்சிக்கும் இது அனுகூலமாக இருக்கும். சுடுகாடுகளில் பிணங்கள் எரிக்கப்பட்டால், அதன் மூலம் வெளிவருகிற புகைகள், மற்றவைகள் சுற்றி இருக்கிற பகுதிகளைப் பாழ்படுத்தி விடுகின்றன. இந்த யோசனை நல்ல யோசனைதான். என்ன காரணத்தினாலோ மாநகராட்சி இதை நிறுத்தி வைத்துவிட்டது. மாநாராட்சியைப் பொறுத்த வரையில், மீண்டும் இது குறித்துப் பரிசீலனை செய்து தக்க முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி செய்யலாம்.

Opening of service centres by Agro-Industries Corporation

* 375 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the Madras Agro-Industries Corporation Ltd., has started five service centres in Tamil Nadu to help farmers owning tractors and other farm machinery?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தமிழ் நாட்டில் "டிராக்டர்கள்", ஏனைய பண்ணைத் தொழில் இயந்திரங்களைச் சொந்தமாகக் கொண்ட உழவர்களுக்கு உதவியாக எந்தப் பணிநிலையத்தையும் இதுவரை தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் சார்ந்த கழகம் தொடங்கவில்லை. எனினும், அத்தகைய பணி நிலையங்களைத் தொடங்குவதற்குரிய செயற்குறிப்பு இக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம்: அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் நம்முடைய மாநிலத்தில் ஐந்து இடங்களில் இதைத் துவக்கினார்கள், அவர்கள் நம்முடைய அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு விவசாயிகளுக்கு இந்தப் பணியைச் செய்யப் போகிறார்கள் என்றெல்லாம் வெளிவந்த செய்தி உண்மையா? அப்படியில்லை என்றால் அது கைவிடப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தமிழ் நாடு வேளாண்மைத் தொழில் கழக இயக்குநர்கள் வாரியம் (போர்டு ஆப் டைரக்டர்ஸ்) 29—8—1967-ல் இப்படிப்பட்ட ஒரு